## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி
## ஆறாம் பத்து

### நான்காம் திருமொழி - கண்ணும்
### திருநறையூர் 1

** கண்ணும் சுழன்று * பீளையோடு ஈளை வந்து ஏங்கினால் *
பண் இன்மொழியார் * பைய நடமின் என்னாத முன் **
விண்ணும் மலையும் * வேதமும் வேள்வியும் ஆயினான் *
நண்ணு நறையூர் * நாம் தொழுதும் எழு நெஞ்சமே! 1

கொங்குண் குழலார் * கூடி இருந்து சிரித்து * நீர்
இங்கு என்? இருமி * எம்பால் வந்தது என்று இகழாத முன் **
திங்கள் எரி கால் * செஞ்சுடர் ஆயவன் தேசுடை *
நங்கள் நறையூர் * நாம் தொழுதும் எழு நெஞ்சமே! 2

கொங்கார் குழலார் * கூடி இருந்து சிரித்து * எம்மை
எங்கோலம் ஐயா! * என்? இனிக் காண்பது என்னாத முன் **
செங்கோல் வலவன் * தான் பணிந்து ஏத்தித் திகழும் ஊர் *
நங்கோன் நறையூர் * நாம் தொழுதும் எழு நெஞ்சமே! 3

கொம்பும் அரவமும் * வல்லியும் வென்ற நுண்ணேர் இடை *
வம்புண் குழலார் * வாசல் அடைத்து இகழாத முன் **
செம்பொன் கமுகு இனம் தான் * கனியும் செழும் சோலை சூழ் *
நம்பனறையூர் * நாம் தொழுதும் எழு நெஞ்சமே! 4

விலங்கும் கயலும் * வேலும் ஒண் காவியும் வென்ற கண் *
சலம் கொண்ட சொல்லார் தாங்கள் * சிரித்து இகழாத முன் **
மலங்கும் வராலும் * வாளையும் பாய் வயல் சூழ் தரு *
நலங்கொள் நறையூர் * நாம் தொழுதும் எழு நெஞ்சமே! 5

மின்னேர் இடையார் * வேட்கையை மாற்றி இருந்து *
என் நீர் இருமி * எம்பால் வந்தது? என்று இகழாத முன் **
தொன்னீர் இலங்கை மலங்க * விலங்கு எரி ஊட்டினான் *
நன்னீர் நறையூர் * நாம் தொழுதும் எழு நெஞ்சமே! 6

வில்லேர் நுதலார் * வேட்கையை மாற்றிச் சிரித்து * இவன்
பொல்லான் திரைந்தான் என்னும் * புறன் உறை கேட்பதன் முன் **
சொல்லார் மறை நான்கு ஓதி * உலகில் நிலாயவர் *
நல்லார் நறையூர் * நாம் தொழுதும் எழு நெஞ்சமே! 7

வாள் ஒண்கண் நல்லார் தாங்கள் * மதனன் என்றார் தம்மை *
கேண்மின்கள் ஈளையோடு * ஏங்கு கிழவன் என்னாத முன் **
வேள்வும் விழவும் * வீதியில் என்றும் அறாத ஊர் *
நாளும் நறையூர் * நாம் தொழுதும் எழு நெஞ்சமே! 8

கனி சேர்ந்து இலங்கு நல் வாயவர் * காதன்மை விட்டிட *
குனி சேர்ந்து உடலம் * கோலில் தளர்ந்து இளையாத முன் **
பனி சேர் விசும்பில் * பால் மதி கோள் விடுத்தான் இடம் *
நனி சேர் நறையூர் * நாம் தொழுதும் எழு நெஞ்சமே! 9

** பிறை சேர் நுதலார் * பேணுதல் நம்மை இலாத முன் *
நறை சேர் பொழில் சூழ் * நறையூர் தொழு நெஞ்சமே! என்ற **
கறையார் நெடுவேல் மங்கையர் கோன் * கலிகன்றி சொல் *
மறவாது உரைப்பவர் * வானவர்க்கு இன்னரசு ஆவரே 10

**அடிவரவு:** கண்ணும் கொங்குண் கொங்கார் கொம்பு விலங்கு மின் வில் வாள் கனி பிறை கலங்க

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**